in a position to convert it into fine variety. In order to avoid this, what are the measures taken by the Government?

THE HON. SRI V. RAMAIAH : Now Government are directly procuring. In certain cases they also appoint Co-operative institutions. Collectors have also been appointed as agents under their control. By buying a coarse variety of paddy, I do not think that millers can convert it into a finer variety. If there is any such misuse and if it is brought to the notice of the Collector, suitable action will be taken.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பற்றுக்குறைப் பகுதி சென்னை செங்கற்பட்டு, வட ஆற்காட்டில் உபரி நெல் இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள நெல்லை விற்க வேண்டுமென்றாலும் கொள்முதல் சரிவரச் செய்யப்படுவதில்லை. வெளியே விற்றாலும் தொல்லை ஏற்படுகிறது. இதற்கெல்லாம் அரசாங்கம் என்ன பரிகாரத்தைக் கண்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா : சென்ற வருஷ அனுபவத்தை வைத்து விற்கக்கூடியவர்களுக்குத் தொந்தரவு ஏற்படாமல், தேவையானால், அரசாங்கமே அதிகமாக வாங்கிக்கொள்ள, நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கொள்முதல் செய்யப்படும் போது காய்ச்சல்பாடான நெல் கொள்முதல் செய்யப்படுகிறதா? காய்ச்சல் பாடான நெல்லாக இல்லாமல் இருந்தால் அதைக் காயவைப்பதற்கும் மற்றும் அவற்றுக்கான கோடவுன் வசதிகளும் இருக்கின்றனவா?

கனம் திரு. வெ. ராமைய்யா : காய்ச்சல்பாடான நெல்லைத்தான் வாங்குகிறார்கள். தரக் குறைவான நெல்லை வாங்கினால் அதை உலர்த்திப் பாதுகாப்பதற்காக வசதிகள் எல்லாம் இருக்கின்றன.

திரு. ர. ஜீவரத்னம் : கேழ்வரகானது நமது மாநிலத்திலிருந்து இதர மாநிலங்களுக்கும், இதர ராஜ்யங்களுக்கு இடையேயும் செல்லத் தடை இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : நம்முடைய மாநிலத்தை விட்டு வெளி மாநிலத்திற்குப் போக முடியாது.

Procurement of foodgrains

* 225 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the number of wholesale dealers from whom stocks of foodgrains were requisitioned up to 20th September 1964;

(*b*) the total quantity of foodgrains requisitioned from them;

(*c*) the number of retail dealers whose shops were raided; and

(*d*) the quantity of foodgrains seized from retail dealers?

11th August 1965]

THE HON. SRI V. RAMAIAH : (a) Stocks of foodgrains were requisitioned from two hundred and eight (208) wholesale dealers up to 20th September 1964;

(b) Twenty-four thousand and two hundred and eight (24,208) quintals of paddy and six thousand six hundred and eighty-six (6,686) quintals of rice were requisitioned from them;

(c) One hundred and five (105) retail dealers' shops were raided; and

(d) One quintal of paddy and ninety-four (94) quintals of rice were seized from the retail dealers.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இப்போது மொத்த வியாபாரிகளிடத்திலே அரிசி தேங்கியிருக்கிறது. அரக்கோணம் தாலுகாவில் அந்த நிலைமை இருக்கிறது. அதை எடுத்துக்கொள்வதிலே காலதாமதமாகிறது. இதைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா: மொத்த வியாபாரிகளிடத்தில் அரிசி தேங்கி இருக்கக் காரணம் இல்லை. அவர்கள் அரசாங்கத்திற்காகவே வாங்கி இருக்கவேண்டும். அரசாங்கம் அதை எப்போது எடுக்க வேண்டுமோ, அந்தந்த நேரத்தில் உத்தரவு போட்டு அதை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் ஏஜண்டாக இல்லாமல் சேமித்து வைத்திருந்தால் அது கணக்கில் வந்திருக்காது. அதையும் அரசாங்கம் வாங்க முடியும் என்பதில் சந்தேகம் இல்லை.

திரு. சா. கணேசன்: இதுமாதிரி இராமநாதபுரம் ஜில்லாவிலே பல வியாபாரிகளை அரசாங்கமே நெல் கொள்முதல் செய்யச் சொல்லி, அரிசியாக்கவும் சொல்லி அரிசியாக்கி முடிந்தும், பல மாதங்கள் ஆகியும் அவற்றை விற்கவும் முடியாமல் அப்படியே மூன்று நான்கு மாதங்களாகத் தேங்கியிருப்பது உண்மையா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

கனம் திரு. வெ. ராமைய்யா: இராமநாதபுரம் மாவட்டம் உணவுக்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய மாவட்டம் என்ற காரணத்திற்காக, தஞ்சையில் அறுவடை ஏற்படக் கூடிய நேரத்தில் ஜில்லா கலெக்டர் முயற்சியால், அரசாங்கத்தின் உதவியின் காரணமாக 7, 8 மாதங்களுக்குத் தேவையான நெல்லை வாங்கி வைத்திருக்கிறார்கள். அதை அரிசியாக மாற்றி வைத்திருக்கும் பட்சத்தில் அதிகக் காலம் வைத்துக் கெட்டுவிடக் கூடிய சூழ்நிலை ஏற்படாது இருக்க வேண்டும் என்பதற்காக சென்ற மாதம் இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் போயிருந்தபோது அவர்களிடத்தில் இருக்கிற அரிசியையெல்லாம் மதுரை மாவட்டத்திற்கும், திருநெல்வேலி மாவட்டத்திற்கும் கொடுத்துவிட்டால் அதற்குப் பதிலாக அங்கிருந்து நெல்லாக கொடுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. சா. கணேசன்: சில இடங்களில் நெல்லும் சில இடங்களில் அரிசியுமாக அல்லது இரண்டுமாக இருக்கிறது. பத்தாயிரக்கணக்கான மூட்டைகளை வியாபாரிகளை வாங்கி வைத்துக்கொள்ளச்

சொல்லியிருப்பதால் அந்தடித்து விடுதல் இதுபோன்ற சேதங்கள் ஏற்படுவது என்பது இயல்பான ஒன்று, எல்லோருக்கும் புரிந்த ஒன்று. அந்த நிலையில் ஒரு வியாபாரியை அப்படியே கட்டி வைத்துக்கொள்ளச் செய்தால் அதனால் நஷ்டம் வரும் என்று அவர்கள் கவலை கொண்டிருக்கின்ற காரணத்தை உத்தேசித்து அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள முன்வருமா?

கனம் திரு. வெ. ராமையயா: நான் சொல்லக்கூடிய உறுதி, அரிசியோ நெல்லோ கெட்டுப்போகாமல் பாதுகாக்க அதிகாரிகள் தக்க நடவடிக்கைகள் எடுப்பார்கள்.

திரு ரா. கிருஷ்ணசாமி நாயுடு: கிராம விவசாயிகளிடம் இருந்து காலாகாலத்தில் நெல் போன்ற தான்யங்களை கொள்முதல் செய்வதில் தாமதம் ஏற்படுகிறது என்ற பொதுவான புகார் இருப்பதன் காரணமாக கிரமப்புறங்களில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள், அந்த அந்த ஜில்லாவில் உள்ள சப்ளை அண்ட் மார்கட்டிங் சொஸைட்டிக்கு ஏஜெண்டாயிருந்து எங்கெல்லாம் விவசாயிகள் தானியம் தரத் தயாராயிருக்கிறார்களோ, அவர்களிடம் இருந்து வாங்கி காலாகாலத்தில் அந்த ஜில்லா சொசைட்டிகளுக்கு கொடுக்கும் நிலையை உண்டு பண்ண முடியுமா? அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையயா: அரசாங்கம் சென்ற ஆண்டுதான் பல அமைப்புகளை பயன்படுத்தித் தீவிரமாக நெல் வாங்கும் முயற்சியில் ஈடுபட்டது. சென்ற ஆண்டைப் பார்க்கும்போது அதிலுள்ள பல்வேறு கஷ்டங்களை உணர்ந்திருக்கிறது அரசாங்கம். இந்த ஆண்டு அந்தக் கஷ்டங்களை விவசாயிகளுக்கு ஏற்படாமல் தவிர்ப்பதற்கு வேறு ஏதாவது வழிகளை ஆலோசனைக்கு எடுக்க வேண்டுமென்ற முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. அந்த நிலையில் கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட ஆலோசனையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன்: வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூருக்கு விநியோகிக்கப்படவேண்டுமென்று ஆந்திராவில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு சில நெல் வியாபாரிகள் அதை வட ஆற்காடு மாவட்டத்திற்கு, வேலூருக்கு அனுப்பாமல் நேராக கேரளாவிற்கு வாகன்களில் அனுப்பி விட்டது இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா? அதன் மீது எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன? அது கண்டு பிடிக்கப்பட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது சென்ற ஆண்டு நடைபெற்றது. அப்போதுள்ள நடைமுறை வேறு வகை. அதைப்பற்றி இந்த மன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். இப்போது ஆந்திரா நமக்கு கொடுப்பது, நாம் ஆந்திராவில் இருந்து பெறுவது என்பதல்ல. சென்ட்ரல் பூலில் இருந்து மத்திய சர்க்கார் நமக்கு ஏற்பாடு செய்கிறது. ஆகவே, எங்கு போனாலும் மத்திய சர்க்காரின் கணக்கில் வருகிறது. இப்போது ஏற்பாடு செய்திருப்பது, இரண்டு லட்சம் டன் கேரளாவிற்கு கொடுக்கிறோம் என்றால்

11th August 1965]

அதற்கு ஈடாக ஒரு லட்சம் டன் ஆந்திராவிலிருந்து நமக்கு கிடைக்கிறது. ஆந்திராவில் இருந்து எவ்வளவு வந்திருக்கிறது, நாம் எவ்வளவு கொடுத்திருக்கிறோம் என்று மொத்தக் கணக்கைப் பார்க்கவேண்டும். நமக்கு எவ்வளவு வருகிறது என்பதுதான் கணக்கு. எங்கு வந்தது எங்கு போயிற்று என்று சொல்வதற்கில்லை. அப்படி போயிருந்தாலும் கணக்கு இருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : 20—9—1964 வரை உள்ள உணவு தான்ய இருப்பு பற்றியது மூலக் கேள்வி. அந்த வியாபாரிகள் தவறு செய்து விட்டார்கள் என்றால் அவர்களின் லைசென்ஸ் கான்சல் செய்யப்பட்டனவா? அந்த வியாபாரிகள் இன்னும் பட்டியலில் இருக்கிறார்களா? அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை முதல் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த லிஸ்ட் வேறு. நடைமுறையில் இருப்பது வேறு. அப்போதுள்ள நிலையை அப்போதே விளக்கியிருக்கிறோம். இப்போது அப்படி நடக்க ஒன்றும் இடமில்லை.

திரு. ா. ஜீவரத்தினம் : வட ஆற்காடு ஜில்லாவில் இப்போது பருவ மழை தவறிக் கொண்டிருக்கிறது. பல பகுதிகளில் உழவுத் தொழில் கூட ஆரம்பிக்கப்படவில்லை. அந்த ஜில்லாவிலிருந்து ஏராளமான உணவு தான்யங்கள் இப்போதும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. கடந்த கால அனுபவத்தைக் கொண்டு அந்த ஜில்லாவில் கொள்முதல் செய்யும் உணவு தான்யங்களை அங்கேயே தேக்கி வைக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அங்கத்தினர் அவர்கள் தமது மாவட்டத்தைப் பற்றி அவ்வளவு குறைவாக நினைக்கக் கூடாது. பருவ மழை எங்கும் தவறுவதுண்டு. ஆனால் மாவட்டத்திலிருந்து உபரியாக இருக்கிறதுதான் வெளிஜில்லாக்களுக்கு அனுப்பப்படும். மாவட்டத்திற்கு ஒன்றும் குறைவு வந்து விடாது.

Operation Theatres in Madurai Erskine Hospital

* 226 Q.—Sri V. S. S. Mani : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the operation theatres in the Government Erskine Hospital at Madurai are not equipped with air-conditioning apparatus; and

(b) if so, whether there is any proposal to provide the Hospital with these equipments?

கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் உள்ள ஆபரேஷன் தியேட்டர்களில் குளிர்பதன வசதி ஏற்படுத்துவது குறித்து மருத்துவத் துறை நெறியாளர்களிடமிருந்து செயற் குறிப்புகள் இன்னும் வரவில்லை. அவற்றை 1966-67-க்குரிய 2-ம் பகுதித் திட்டத்தின் கீழ் சேர்த்து ஆலோசிக்கப்படும்.